# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடமாகாணம்

## பயிற்சிப் பரீட்சை - 2016

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

4

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் .......................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 59 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

**01. பின்வரும் பாடலை நன்றாக வாசித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

(i) பாரதியாரின் வேண்டுதல்களில் ஒன்றை எழுதுக.

.......................................................................................................................................................

(ii) கலங்கிய என்பதன் எதிர்ச் சொல் யாது? ...................................................................................

(iii) பரிதி முன் பனியே போல என்ற உவமைத் தொடரின் கருத்து யாது?

.......................................................................................................................................................

(iv) ஞானம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக...........................................................................

(v) பாவம் எதற்கு உவமானமாகக் கூறப்படுகின்றது?.............................................................................

(vi) உயர்திணை ஒருமைச் சொல் ஒன்றை எழுதுக. ................................................................................

(6 புள்ளிகள்)

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து வெற்றிடத்தினுள் எழுதுக.**

(i) அம்மா பருப்புக் ........................................................................................(கரி, கறி ) சமைத்தார்.

(ii) நாம் ................................(கைம்மாறு, கைமாறு) கருதாமல் பிறருக்கு உதவுதல் நல்ல பழக்கமாகும்.

(ii) மாணவர்கள் காலையில் தேகப் ........................................................ (பயிற்சி, பயிர்ச்சி ) செய்தனர்.

(3 புள்ளிகள்)

**03. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவினை எழுதுக.**

(i) இ.ஒ.கூ. : ...........................................................................................................................

(ii) இ.போ.ச. : ...........................................................................................................................

(iii) தே.க.நி. : ...........................................................................................................................

(3 புள்ளிகள்)

**04. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தினை எழுதுக.**

(i) அவசரக் குடுக்கை : ...........................................................................................................

(ii) ஏட்டுச் சுரைக்காய் : ...........................................................................................................

(iii) பொடிவைத்துப் பேசுதல்: ...................................................................................................

(3 புள்ளிகள்)

சுட்டெண் :..................

**05. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

(i) *தன் நாட்டை நேசிப்பவன்* :..............................................................................................................

(ii) *தன்னுடைய நன்மைக்காக மாத்திரம் செயற்படுபவன் :* ..........................................................................

(iii) *ஒருவருக்கும் இம்சை செய்யாமை :* .....................................................................................................

*(3 புள்ளிகள்)*

**06. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

(i) *பட்டங்கள் வானத்தில் பறந்தன.* ( )

(ii) *ஒவ்வொரு வளையல்களும் அழகானது.* ( )

(iii) *பசுக்கன்று தாய்பின்னே துள்ளி ஓடின.* ( )

*(3 புள்ளிகள்)*


**07. ஆண் , பெண் மரபுப் பெயர்களை எழுதுக.**

(i) *ஆடு: கடா என்பதுபோல குதிரை:*......................................

(ii) *மான்: பிணை என்பதுபோல மயில் :*...................................... *(2 புள்ளிகள்)*

**08. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

(i) 

(ii) 


..................... ......................... *(2 புள்ளிகள்)*

**09. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

(i) Can I help you ? :.......................................................


(ii) What is your name? : ....................................................... *(2 புள்ளிகள்)*

**10. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

(i) *கண்களை மூடுங்கள் :*.......................................................

(ii) *நாங்கள் வீட்டிற்குப் போவோம்.:*............................................. *(2 புள்ளிகள்)*

**11. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.**

(i) 

(ii) 

............................ ...................................... *(2 புள்ளிகள்)*

**12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

(i) *அம்மா உயல இவற (DH) த ?* .................................................

(ii) *அன்ன(G) குரு(த்)துமா எனவா.* ................................................ *(2 புள்ளிகள்)*

13. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.**

*நான் குளிக்கட்டுமா? ..................................................................................... (1 புள்ளி)*

*14. "கண்ணனும் குமாரும் பாடசாலை விட்டு வீடுசென்று கொண்டிருக்கும் போது திடீரென மழை பெய்யத் தொடங்கியது. அவர்கள் இருவரும் ........." எனும் சம்பவத்தைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருப்பதுடன் எழுவாய், பயனிலைத்தொடர்பு பேணப்பட்டிருத்தல் வேண்டும்.)*

(i) ..........................................................................................................................
..........................................................................................................................

(ii) ..........................................................................................................................
..........................................................................................................................

(iii) ..........................................................................................................................
..........................................................................................................................


*(6 புள்ளிகள்)*

* **தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது விடையை எழுதுக.**

*15.* 5 7 9 0


*தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணைச் சொற்களில் எழுதுக.*

..........................................................................................................................

*16.* 

*பூவிலுள்ள இதழ்களின் எண்ணிக்கையின் இருமடங்கினை உரோமன் எண்குறியில் எழுதுக. .........................................................................*

*17 மூன்று பென்சில்களினதும் மொத்த நீளம் யாது?* ..................................................





*18. மு.ப 10.20 மணிக்கு ஆரம்பமான கலை நிகழ்வு பி.ப 3.30இற்கு நிறைவடைந்தது. கலைநிகழ்வு நடைபெற்ற காலம் யாது?*

*............... மணி .................. நிமி*

*19. ஒரு போத்தலில் 1லீற்றர் 120 மில்லி லீற்றர் குளிர்பானம் உள்ளது. அவ்வாறான நான்கு போத்தல்களில் உள்ள குளிர்பானத்தின் இரண்டு மடங்கு எவ்வளவு?*

..........................................................................................................

*20.* 


*நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?*


....................................................

*21. மேலே ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு ஒரு சதுர சென்ரிமீற்றர் எனின் முழு உருவின் சுற்றளவு யாது?*
.............................................

22. இக்கடிகாரம் பிற்பகல் வேளை 10 நிமிடங்கள் முந்தி ஓடுகிறது எனின் கடிகாரம் காட்டும் சரியானநேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..........................................................



23.  உருவில் உள்ள உருளையில் இருக்கும் தட்டையான மேற்பரப்புக்கள் எத்தனை? ....................................................

24. 12cm நீளமும் 1cm அகலமும் கொண்ட ஆறு செவ்வகக் கீலங்கள் ஒவ்வொன்றும் 3cm அளவில் ஒன்றன்மீது ஒன்று வைத்து தொடராக ஒட்டும்போது கிடைக்கும் கீலத்தின் மொத்த நீளம் யாது?

…......................................................................

25. பொதியொன்றில் 18 இனிப்புக்கள் வீதமுள்ள 5 பொதிகளும், 12 இனிப்புக்கள் வீதமுள்ள 3 பொதிகளும் உள்ளன. எல்லாமாக எத்தனை இனிப்புக்கள் உள்ளன? ……...................................................

26. தொட்டி ஒன்றின் கொள்ளளவு 36 $l$ ஆகும். அதில் 1/4 பங்கிற்கு நீர் உள்ளது. தொட்டியில் 3/4 பங்கிற்கு நீர் நிரப்ப வேண்டுமாயின் எவ்வளவு நீர் தொட்டியில் நிரப்பப்பட வேண்டும்? .......................................................

27. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | அம்பாந்தோட்டை | 230 Km |
| கொழும்பு | மாத்தறை | 140 Km |
| காலி | அம்பாந்தோட்டை | 135 Km |
| காலி | மாத்தறை | .......Km |

28. 1750g பருப்பு சம அளவு கொண்ட 10 சரைகளாக கட்டப்பட்டது. இரு சரைகளில் உள்ள பருப்பின் மொத்த நிறை யாது? ……………………………………

29. குறித்த தொகை மாணவர்கள் ஒரு வரிசையில் நின்றிருந்தனர் முன்புறமாகப் பார்க்கையில் கண்ணன் 8 ஆவதாகவும் பின்பக்கத்திலிருந்து பார்க்கையில் கண்ணன் 17ஆவதாகவும் இருந்தான். வரிசையில் நின்ற மாணவர்கள் எத்தனைபேர்? ……………………………..


(30புள்ளிகள்)

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. காற்றின் மூலம் பரம்பலடையும் தாவரம்?

1) மரமுந்திரிகை 2) தேக்கு 3) கொய்யா 4) எருக்கலை

31 இத்தையல் முறைக்கு வழங்கும் பெயர்?




1. சங்கிலித் தையல்
2. நரம்புத்தையல்
3. கம்பளித் தையல்
4. பூத்தையல்

32. மூல வர்ணங்கள் என அழைக்கப்படுவன?


1) சிவப்பு, நீலம், பச்சை    2) மஞ்சள் ,நீலம் ,வெள்ளை
3) சிவப்பு, நீலம், மஞ்சள்    4) மஞ்சள், நீலம், பச்சை

33. இலங்கைப்படத்தில் A,Bஇனால் குறித்துக் காட்டப்படும் தரைத்தோற்ற உறுப்புக்கள் முறையே?




1) தாழ்பிரதேசம் ,மலைப் பிரதேசம்
2) மலைப் பிரதேசம், வயற்பிரதேசம்
3) பிரதானஆறுகள், மலைகள்
4) இடங்கள், எல்லைகள்

34. காந்தம் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது. இக்காந்தத்தின் பெயர் என்ன?



1. வட்டக் காந்தம்    2. பரிலாடக் காந்தம்
3. U வடிவக் காந்தம்    4. சட்டக் காந்தம்

35. இலங்கைக்கேயுரித்தான பறவை எது?

1. மயில்    2. கிவி    3. காட்டுச்செண்பகம்    4. கழுகு

36. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளர்வது?

1) நாகணவாய்    2) வௌவால்    3) கிவி    4) இரட்டைவாற் குருவி

37. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் முறை?

(1) மரத்தின் நிழலில் நிற்றல்
(2) சமவெளியான இடத்தை நோக்கி ஓடுதல்
(3) வீட்டில் கதிரைமீது இருத்தல்
(4) உயரமான இடத்தில் ஏறி நிற்றல்

38. சூரியனுக்கு மிக அண்மையில் இருக்கும் கோள் எது?

1) பூமி    2) புதன்    3) செவ்வாய்    4) வியாழன்

39. காந்தத்தினைக் கிட்டக் கொண்டு வரும்போது காந்தத்தினால் கவரப்படாத பொருள் எது?

1) இரும்பு ஆணி    2) தகரப்பேணி    3) குண்டூசி    4) பித்தளை

40. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடாக இருப்பது,

1) அரசமிலை    2) சூரியன்    3) மயில்    4) காட்டுக்கோழி

41. இலங்கையின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி எது?

1) தியலும    2) துன்கிந்த    3) பம்பரகந்த    4) அபர்டீன்

42. “வானம் என்னும் திரையிலே – நீல
வண்ணம் அடித்தோர் ஆராமோ? …..” எனும் பாடலைப் பாடியவர்?

1) அழ.வள்ளியப்பா 2) அப்துல் காதர்
3) கவிஞர் வாகரை வாணன் 4) தேசிகவிநாயகம்பிள்ளை

43. கார்த்திகை, வேட்டைக்காரன் பெருங்கரடி ஆகிய பெரிய உடுக்கோலங்களைக் காணக்கூடிய மாதங்கள்?

1) மாசி, பங்குனி 2) மாசி , வைகாசி
3) கார்த்திகை, மார்கழி 4) சித்திரை, வைகாசி





44. சந்தையில் பொதி செய்யப்பட்ட பொருள்களை வாங்கும்போது நீங்கள் முதலில் கவனத்தில் கொள்ளவேண்டியது எது?

1) காலாவதித் திகதி 2) பொதி செய்த திகதி 3) உற்பத்தித் திகதி 4) விற்கப்படும் திகதி

45. தரமற்ற தேயிலையைத் தண்ணீரில் இட்டால் தோன்றும் நிறம்?

1) கபிலம் 2) மண்ணிறம் 3) இளங்கபிலம் 4) இளம் மஞ்சள்

46. மின்காந்தத் தொழிற்பாட்டில் அதிகமான குண்டூசியைக் கவரக் கூடிய உரு எது?

1) 
2) 
3) 
4) 

47. தாவரத்திற்குப் பூவிலிருந்து கிடைக்கும் பயன்?

1) அழகூட்டல் 2) நறுமணத்தைப் பரப்பல்
3) இனத்தைப் பரப்ப உதவுதல் 4) தாவரத்தின் ஆயுட் காலத்தைக் கூட்டல்.

48. கண்டக் கழலை நோய்க்கு மிகப் பிரதான காரணம் யாது?

1) கல்சியக் குறைபாடு 2) விற்றமின் A குறைபாடு
3) அயடீன் குறைபாடு 4) இரும்புச் சத்துக் குறைபாடு.

49. இலங்கை மின்சார சபை என்பதைக் குறிக்கப்பயன்படும் குறியீடு எது?

1) 
2) 
3) 
4) 

50. வடமேல் மாகாணத்தினுள் அடங்கும் மாவட்டம் யாது?

1) குருநாகல் 2) பதுளை 3) அநுராதபுரம் 4) அம்பாந்தோட்டை

51. அவுஸ்ரேலியாவின் தேசிய சின்னம்?

1) பண்டா 2) கங்காரு 3) கிவி 4) மயில்

52. பின்வரும் விளையாட்டுக்களில் சுவட்டு நிகழ்ச்சி அல்லாதது எது?

1) சட்டவேலி 2) 75மீற்றர் ஓட்டம் 3) நீளம்பாய்தல் 4) அஞ்சலோட்டம்

53. புரதச்சத்து அதிகமாகவுள்ள தாவரவுணவு

1) மரவள்ளிக் கிழங்கு 2) மீன் 3) வல்லாரை 4) சோயாஅவரை

54. பூச்சியொன்றின் மிகப் பெரிய உடற்பாகம்?

1) கால் 2) தலை 3) வயிறு 4) நெஞ்சு

55. மணல் மண்ணில் காணக்கூடிய இயல்புகளில் ஒன்று எது?

1) பயிர்ச்செய்கைக்கு உகந்தது. 2) போசணைப் பொருள்கள் அடங்கியது.

3) நீரைத்தேக்கும் இயல்புடையது. 4) காற்றிடைவெளி கூடியது.

56. ஒரிகாமி ஆக்கம் என்பது?

1) கோடுகள் மூலம் வரையப்படும் ஆக்கம். 2) கடதாசியைக்கரைத்துச் செய்யப்படும் ஆக்கம்.

3) வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கம். 4) கடதாசியை மடித்துச்செய்யப்படும் ஆக்கம்.

57. படத்தில் காணப்படும் பறவை எது?



1. காகம்
2. பருந்து
3. நீர்க்காகம்
4. மரங்கொத்தி

58. எரிந்துகொண்டிருக்கும் நெருப்பினுள் காய்ந்த உப்புக்கட்டி ஒன்றை இடும்போது நடைபெறுவது யாது?

1) உப்புக்கட்டி உருகும் 2) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடிக்கும்.

3) உப்புக்கட்டி நன்கு எரியும் 4) தீ அணைந்துபோகும்.

59. தொற்று நோய் (பிரதேசம் பூராகவும்) பரவும் போது உடனடியாக எவருக்கு அறிவிக்கவேண்டும்?

1) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு 2) மருத்துவமனை அதிகாரிக்கு

3) பாடசாலை அதிபருக்கு 4) பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு

(30புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 04 இன் விடைகள்

**தரம் - 05** **4** **வினாத்தாள் - II**

(1) (1) எண்ணிய முடிதல், நல்லவே எண்ணல் (பொருத்தமானது)
(2) தெளிந்த (3) உடன் மறைதல் (4) அறிவு (5) பனி (6) அன்னாய் / அன்னை (6 புள்ளிகள்)

(2) (1) கறி (2) கைம்மாறு (3) பயிற்சி (3 புள்ளிகள்)

(3) (1) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (2) இலங்கைப் போக்குவரத்துச்சபை
(3) தேசிய கல்வி நிறுவகம் (3 புள்ளிகள்)

(4) (1) பதற்றக்காரன் (2) அனுபவமில்லாத கல்வியறிவு / பயனற்ற கல்வியறிவு
(3) தந்திரமாய்ப் பேசுதல் (3 புள்ளிகள்)

(5) (1) தேசாபிமானி / நாட்டுப்பற்றாளன் (2) சுயநலவாதி
(3) அகிம்சை / வருத்தாமை / துன்புறுத்தாமை (3 புள்ளிகள்)

(6) (1) ✓ (2) x (3) x (3 புள்ளிகள்)

(7) (1) குண்டு (2) அளகு (2 புள்ளிகள்)

(8) (1) Horse (2) Ruler (2 புள்ளிகள்)

(9) (1) நான் உங்களுக்கு உதவலாமா?, நான் உங்களுக்கு உதவ முடியுமா?
(2) உமது / உங்களுடைய பெயர் என்ன? (2 புள்ளிகள்)

(10) (1) Close your eyes (2) Let's go home (2 புள்ளிகள்)

(11) (1) கலு லேல்ல (2) லேனா (2 புள்ளிகள்)

(12) (1) அம்மா சமைத்து முடித்து விட்டாரா? (2) அதோ ஆசிரியர் வருகிறார். (2 புள்ளிகள்)

(13) (1) மம நான்ன (Dh) த? (1 புள்ளிகள்)

(14) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

(15) ஐயாயிரத்து எழுபத்தொன்பது / ஐந்தாயிரத்து எழுபத்தொன்பது

(16) x

(17) 15cm

(18) 5 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

(19) $8l\ 960ml$

(20) $\frac{8}{32}, \frac{1}{4}, \frac{4}{16}$

(21) 16cm

(22) 14:25 மணித்தியாலயங்கள்

(23) 2

(24) 42cm

(25) 126 இனிப்புக்கள்

(26) $18l$

(27) 45km

(28) 350g

(29) 24 பேர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (30) | 4 | (41) | 3 | (52) | 3 |
| (31) | 3 | (42) | 3 | (53) | 4 |
| (32) | 3 | (43) | 2 | (54) | 3 |
| (33) | 1 | (44) | 1 | (55) | 4 |
| (34) | 2 | (45) | 1 | (56) | 4 |
| (35) | 3 | (46) | 2 | (57) | 3 |
| (36) | 2 | (47) | 3 | (58) | 2 |
| (37) | 3 | (48) | 3 | (59) | 4 |
| (38) | 2 | (49) | 2 | | |
| (39) | 4 | (50) | 1 | | |
| (40) | 2 | (51) | 2 | | |

(30 புள்ளிகள்)